DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**UTHIRAMERUR.**

**OS.No. 14 of 2022**

| | |
|---|---|
| Name: **சங்கர்** | Age: |
| Father Name:**முனுசாமி**<br>Husband Name : | Profession: |
| Address: | |
| The Oath was administered to the witness by Tmt.Mrs.Abirami. M. Gr.III Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 09.07.2026 | |

**09.07.2026**

**விசாரணை தொடங்கிய நேரம் 3.10 PM**

**வா.சா.1 – குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதப்படிக்க தெரயாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதிகள் எனது சொத்தில் தொந்தரவு செய்வதாலும் அவரது பத்திரம் செல்லது எனவும் அதனை எதிர்த்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். யாருக்கு எதிராக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அருள்மேரி, தெரசா பெயரில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் சர்வே எண்.501/8C பின்பு சாட்சி மாற்றி 571/8C என குறிப்பிடுகிறார். எவ்வளவு விஸ்திரணத்திற்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் 38 சென்டிற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன்.

தாவா சொத்தின் நான்கு பக்க எல்லைகள் என்னவென்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் வகைப்பாடு என்னவென்றால் அந்த விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்தின் பட்டா எண்

என்னவென்றால் ஞாபகம் இல்லை.

(மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 3.15 PM**

**Sd/R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**